## தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்களுக்கு

# போதிய நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திடுவீர்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் - ஒன்றிய ரயில்வே அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஆக. 20-

**தெற்கு இரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைந்திருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இரட்டைப் பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென வலியுறுத்தி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு நேற்று

(19.8.2024) எழுதியுள்ள கடிதத்தில், 2024-2025 நிதியாண்டில் வழக்கமான இரயில்வே பட்ஜெட்டில், தெற்கு இரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்திருப்பதால், அதன் விளைவாக தமிழ்நாட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து குறிப்பிட்டு, தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இரட்டைப் பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்குப் போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ஏமாற்றமளிக்கும் நிதி ஒதுக்கீடு**

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், 2024-2025 நிதியாண்டுக்கான இந்திய இரயில்வேக்கான வழக்கமான பட்ஜெட்டில், சில கணக்குத் தலைப்புகளின்கீழ் தெற்கு இரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது ஏமாற்றமளிப்பதாகவும், அதே ஆண்டின் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைவு என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

கணக்குத் தலைப்பு 11புதிய பாதைகள் என்பதன்கீழ் இடைக்கால ஒதுக்கீடாக 976.1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கமான பட்ஜெட் ஒதுக்கீட்டில் வெறும் 301.3 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், கணக்குத் தலைப்பு 15இரட்டைப் பாதையாக்கல் என்பதன்கீழ் இடைக்கால ஒதுக்கீடாக 2,214.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கமான பட்ஜெட் ஒதுக்கீட்டில் 1,928.8 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

**திட்டங்களின் முன்னேற்றம் கடுமையாகப் பாதிக்கப்படும்!**

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில், புதிய வழித்தடத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் ரூ.674.8 கோடி அளவிற்கு அதிரடிக் குறைப்பு



செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் பல முக்கியத் திட்டங்களின் முன்னேற்றம் கடுமையாக பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டு, அந்த வகையில், திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை, திண்டிவனம், நகரி, அத்திப்பட்டுபுத்தூர், ஈரோடு, பழனி, சென்னை, கடலூர், மகாபலிபுரம், மதுரை, தூத்துக்குடி (வழிஅருப்புக் கோட்டை), ஸ்ரீபெரும்புதூர், கூடுவாஞ்சேரி, இருங்காட்டுக் கோட்டை, ஆவடி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஏழு முக்கிய திட்டங்கள் பாதிக்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், இரட்டைப் பாதைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை 285.64 கோடி ரூபாய் அளவிற்குக் குறைத்திருப்பது, தமிழ்நாட்டில் மிகவும் அத்தியாவசியமாக உள்ள இரட்டைப் பாதை திட்டங்களைச் செயல்படுத்துவதை நிச்சயம் தாமதப்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்த வகையில், விழுப்புரம், திண்டுக்கல், திருவள்ளூர், அரக்கோணம், (4வது லேன்), ஓமலூர், மேட்டூர், அணை, திருவனந்தபுரம், கன்னியாகுமரி, மதுரை, மணியாச்சி, தூத்துக்குடி, மணியாச்சிநாகர்கோவில், சேலம், மேக்னசைட் சந்திப்பு ஓமலூர், காட்பாடி, விழுப்புரம், சேலம், கரூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், சென்னை கடற்கரை, சென்னை எழும்பூர், அரக்கோணம், யார்டு சாலை 1 மற்றும் 2க்கு, 3 வது மற்றும் 4 வது வழித்தடம் இணைப்பு போன்ற திட்டங்கள் பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**பணிகளை தாமதமின்றி விரைவு படுத்திடுக!**

மேலும், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள் தொடர்பாக தெற்கு இரயில்வேயில் நிலுவையில் உள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து எடுத்துரைக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், மின்சாரப் பேருந்து சேவைகள், பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை மாநில அரசிடம் ஒப்படைப்பது போன்ற பணிகள் எவ்வித தாமதமும் இன்றி விரைவு படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அப்பணிகளின் விவரங்களை தனது கடிதத்தில் விவரித்துள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இருவழிப்பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த முக்கியத் திட்டங்களை மேலும் தாமதப்படுத்தக் கூடாது என்றும், இது தொடர்பாக ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதியில்

## தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகம் திறந்திடுக!

### ஒன்றிய அமைச்சர்களுக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

புதுடெல்லி, ஆக. 20 -

பெரம்பூர் அல்லது ஆர். கே.நகர் பகுதியில் தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகத்தை அமைக்கும்படி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராயே எம்.சிந்தியா ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதியைச் சேர்ந்த மக்கள் என்னிடம் வழங்கியுள்ள மனுவில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்



குட்பட்ட பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதியில் தபால் அலுவலகத்துடன் இணைந்த கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்கும் அலுவலகத்தை அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கடந்த சில வருடங்களாக மேல்படிப்பு, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா செல்வதற்கு என நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை தாங்கள் அறிவீர்கள். இதனால் புதிதாக வெளிநாடு செல்ல முயலும் மக்களின் எண்ணிக்கை கூடி வருவதால், பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) கேட்டு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**கடவுச் சீட்டு அலுவலகம் ஒன்று கூட இல்லை!**

வளர்ந்து வரும் கடவுச் சீட்டுக் கோரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து விரைவில் கடவுச்சீட்டு வழங்க வேண்டும் என்ற கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் (பாஸ்போர்ட் சேவா கேந்திரா) இல்லாத இடங்களில் அமைந்துள்ள தலைமை தபால் அலுவலகம் அல்லது தபால் அலுவலகத்துடன் இணைந்து செயல்படும் வகையில், தபால் அலுவலகத்துடன் இணைந்த கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தை அமைக்கும் திட்டம் 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவரை நாடெங்கும் 429 இடங்களில் இதுபோன்ற அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய தொகுதிகளில் ஒன்றான எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் ஒரு கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் கூட இல்லை. சென்னையில் அமைந்தகரை, சாலிகிராமம் மற்றும் தாம்பரம் முதலான இடங்களில் மட்டும் தற்போது கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவை மத்திய சென்னை மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளாகும். எனது தொகுதியைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு சற்று தொலைவான இடங்களில் அமைந்துள்ள கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே, எனது வட சென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதிகளில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களில் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தையும் அமைத்து தபால் அலுவலகம் மற்றும் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் (போஸ்ட் ஆபீஸ் மற்றும் பாஸ்போர்ட் சேவா கேந்திரா) அமைத்துத் தரும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். ஒன்றிய வெளியுறவுத்துறை, தகவல் தொடர்பு துறையும் இணைந்து இத்தகைய தபால் அலுவலகம் பாஸ்போர்ட் சேவா கேந்திரா அலுவலகங்களை அமைக்க வேண்டும் என்பதால் இக்கோரிக்கையை மேற்படி இரு அமைச்சகங்களுக்கும் ஏற்கப்பட்டு விரைந்து ஆவன செய்யப்படும் என்று நம்புகின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதங்களில் கூறியுள்ளார்.

---

### குமாரபாளையம் முரசொலி முகவரின் மனைவி

## பி.ஜமுனா (எ) குஷ்பு மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

நாமக்கல் ஆக.20-

நாமக்கல் மேற்கு மாவட்டம் மாணவரணி துணை அமைப்பாளரும் குமாரபாளையம் முரசொலி முகவருமான ஏ.ஐயப்பன் (எ) பெருமாள் மனைவி பி. ஜமுனா (எ) குஷ்பூ உடல்நிலை சரியில்லாமல் 19.8.2024 திங்கட்கிழமை அதிகாலை மறைவெய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் அன்னார் அவர்களின் உடலுக்கு கழகத்தினர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

---

### ஒட்டப்பிடாரம் தொகுதியில் - இன்று முதல் 3 நாட்களுக்கு

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிவிப்பு!

துத்துக்குடி, ஆக. 20-

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் 20, 21, 24 தேதிகளில் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

2024 ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் வேட்பாளராக தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட்ட கனிமொழி கருணாநிதி 5,40,729 வாக்குகள் வழங்கி 3,92,738 வாக்குகள் வித்தியாசத்தில் இரண்டாவது முறையாக மக்கள்



பெருவெற்றியை தந்தனர்.

மாபெரும் வெற்றியை வழங்கிய வாக்காள பெருமக்களுக்கும் சிறப்பான முறையில் தேர்தல் பணியாற்றிய இந்தியா கூட்டணி கட்சியினருக்கும் நேரடியாக நன்றி தெரிவிக்கும் விதமாக ஆகஸ்ட் 20,21,23 ஆகிய தேதிகளில் கீழ்க்காணும் பகுதிகளில் உள்ள பொது மக்களை சந்திக்கிறார்.

20.08.2024 - செவ்வாய்க் கிழமை மாலை மாலை 5 மணி தருவைக்குளம் மாலை 5.30 மணி புதியம்புத்தூர் மாலை 6 மணி ஒட்டப்பிடாரம் மாலை 6.30 மணி ஒசனூத்து இரவு 7.15 மணி அக்கநாயக்கன்பட்டி இரவு 7.45 மணி மருதன்வாழ்வு இரவு 8.30 மணி அயிரவன் பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளிலும், 21.08.2024 புதன் கிழமை மாலை 5 மணி புதுக்கோட்டை மாலை 5.30 மணி தங்கம்மாள்புரம் மாலை 6 மணி முடிவைத்தானேந்தல் மாலை 6.45 மணி பேரூரணி இரவு 7.30 மணி செக்காரக்குடி இரவு 8 மணி தெய்வச்செயல்புரம் இரவு 8.30 மணி வல்லநாடு இரவு 9 மணி வசவப்பபுரம் ஆகிய ஊராட்சி பகுதிகளிலும்,

24.08.2024 - சனிக்கிழமை மாலை 5 மணி குலையன்கரிசல் மாலை 5.30 மணி எம். சவேரியார்புரம் மாலை 6 மணி ராஜிவ் நகர் மாலை 6.30 மணி மாதாநகர் சந்திப்பு இரவு 7 மணி தாளமுத்துநகர் மெயின் ரோடு ரோசம்மாள் பேருந்து நிறுத்தம், இரவு 7.30 மணி ஹவுசிங் போர்டு இரவு 8.00 மணி பண்டாரம்பட்டி ஆகிய மாநகராட்சி பகுதிகளிலும் மற்றும் ஊராட்சி பகுதிகளிலும் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஒன்றிய, பகுதிச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### செஞ்சி ஒன்றியத்தில் 53.21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட

## ஊராட்சி மன்ற கட்டிடங்கள், ரேஷன் கடை!

### மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, ஆக.20-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பொன்பத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 22.65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டிடம்,கவரை ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் ரூபாய் 7.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலை, தென் புதுப்பட்டு ஊராட்சியில் தேசிய கிராமசுயாட்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 23.56லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர்கள் துரை, பணிமலர், கவிதா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் அனுசுயா,அய்யனார் சிவகுமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 53.21லட்சம் மதிப்பீட்டில் பொன்பத்தி ஊராட்சியில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டிடத்தையும் கவரை ஊராட்சியில் கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலைக் கடையும், தென் புதுப்பட்டு ஊராட்சியில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.



திருப்பத்தூர் நகரில் பல்வேறு வார்டுகளில் சி.என்.அண்ணாதுரை எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர் சு.நல்லதம்பி எம்.எல்.ஏ. முன்னாள் நகர மன்றத் தலைவர் சு.அரசு உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தி.மு.க இளைஞர் அணி சார்பில் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற 'என் உயிரினும் மேலான' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியை தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு சான்றிதழ் வழங்கினார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா முன்னிலை வகித்தார். நடுவர்களாக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட பொன்.முத்துராமலிங்கம், வி.சி.சந்திரக்குமார், மதுரை பாலா, தமிழ்காமராசன், மருத்துவர் சஃபிசுலைமான், கணேஷ்பாபு செயல்பட்டனர், இந்நிகழ்ச்சியில் சண்.இராமநாதன், சு.ப.தமிழழகன். அஞ்சகம் பூபதி. க.முகில்வேந்தன், ஜி.கே.எம். ராஜா, ஆதி.ராஜேஷ் உள்ளிட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள். கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.